செய்தி வெளியீடு எண் :02 நாள் :01.11.2021

**தேனி மாவட்டம்**

**சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியலை**

**மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்**

**திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்:-**

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தேனி மாவட்டத்திலுள்ள 198. ஆண்டிபட்டி, 199. பெரியகுளம், 200.போடிநாயக்கனூர், 201.கம்பம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சிகளின் நிர்வாகிகள் முன்னிலையில் இன்று (01.11.2021) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டு தெரிவித்ததாவது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, மாவட்டத்தில் 01.01.2022-ஐ தகுதி நாளாகக் கொண்டு 198-ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதியில் 1,36,926 ஆண் வாக்காளர்களும், 1,40,418 பெண் வாக்காளர்களும், 34 இதர வாக்காளர்களும் என மொத்தம் 2,77,378 வாக்காளர்களும், 199-பெரியகுளம் (தனி) சட்டமன்ற தொகுதியில் 1,39,775 ஆண் வாக்காளர்களும், 1,45,325 பெண் வாக்காளர்களும், 105 இதர வாக்காளர்களும் என மொத்தம் 2,85,205 வாக்காளர்களும், 200-போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதியில் 1,35,950 ஆண் வாக்காளர்களும், 1,42,008 பெண் வாக்காளர்களும், 20 இதர வாக்காளர்களும் என மொத்தம் 2,77,978 வாக்காளர்களும் உள்ளனர்.

மேலும், 201-கம்பம் சட்டமன்ற தொகுதியில் 1,40,408 ஆண் வாக்காளர்களும், 1,46,927 பெண் வாக்காளர்களும், 36 இதர வாக்காளர்களும், என மொத்தம் 2,87,371 வாக்காளர்களும் என ஆக மொத்தம் மாவட்டத்தில் 5,53,059 ஆண் வாக்காளர்களும், 5,74,678 பெண் வாக்காளர்களும், 195 இதர வாக்காளர்களும், என மொத்தம் 11,27,932 வாக்காளர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று உள்ளனர்.

இன்று வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல்கள், அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகம் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்கள் / நிர்ணயிக்கப்பட்ட அனைத்து வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் குடியிருப்போர் நலச்சங்கங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். மேற்கண்ட இடங்களில் பொதுமக்கள் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சரியான விபரத்துடன் இடம் பெற்றுள்ளதா என உறுதி செய்து கொள்ளலாம்.

மேலும், 01.01.2022-ம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தம் 2022 அனைத்து நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களிலும் 01.11.2021 முதல் 30.11.2021 வரையிலான வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரையிலும், சிறப்பு முகாம் நாட்களான 13.11.2021(சனி), 14.11.2021(ஞாயிறு), 27.11.2021 (சனி) மற்றும் 28.11.2021 (ஞாயிறு) ஆகிய நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையிலும் நடைபெறவுள்ளது.

மேற்கண்ட நாட்களில், 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள் அனைவரும் பெயர் சேர்த்தலுக்கான படிவம் 6, பெயர் நீக்கலுக்கான படிவம் 7, விபரம் திருத்துதலுக்கான படிவம் 8 மற்றும் ஒரே தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்தலுக்கான படிவம் 8A-ன் மூலம் வாக்காளர்கள் அனைத்து நிர்ணயிக்கப்பட்ட வாக்குச் சாவடி மையங்களிலும் விண்ணப்பித்து பயனடையலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், பெரியகுளம் சார் ஆட்சியர் செ.ஆ.ரிஷப், இ.ஆ.ப., உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி கௌசல்யா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) விமலாராணி, தேர்தல் வட்டாட்சியர் ஜே.பாலசண்முகம், அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சிகளின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**